# வாழிய நிறைந்து!



**எண்பதாம் அகவை** தன்னை
இனியதாய் அடைந்தே நிறைந்து,
தொண்டினைத் தொடரும் நிலையாய்,
தோழமை வாழ்வைச் சூடி,
கண்டதாம் இல்லறம் தன்னில்,
கனிவுசீர் மக்கள் கொண்டு,
எண்ணிய எண்ணம் தன்னில்,
யாவுமே நலமாய்க் கண்டு,



இன்றிந்த பெருமை கொள்ளும்
இனியர் **கோபால் ரத்தின** மாமா,
அன்றந்த மாமி **மனோன்மணி**யை
மகிழ்வுடன்கைத்தலம் பற்றிட
சென்றதாம் நாள்கள் யாவும்,
சீரிய பெருமை கொள்ள,
அன்றலர்ந்த மலராய்ப் பெயரன்
பெயர்த்தியாக நிறைவு கண்டு,

இன்றிந்த நாளில் மகிழ்ந்து,
இனியதாய் நோய் நொடியற்று,
என்றும்போல் மகிழ்வைச் சூடி,
கொள்ளும் பேயரரைக் கண்டு,
மன்றில் சூழும் பெருமையோடு,
மண்ணகம் வாழ்ந்திருக்க,
அன்பினால் இறையை வேண்டி,
அன்புடன் வாழ்த்துவோமே!



அன்புடன்,
**கு.ப. அசோகன் & மங்கையர்க்கரசி**
**13–7-2023**